**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.09** **நாள் : 09.01.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக ''புகையில்லா போகி'' சிறப்பு விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, சென்னை மாநகரில் உள்ள பள்ளி, கல்லூரிகள் மற்றும் குடிசைப்பகுதிகளில் நோய்கள் உருவாகும் விதம், அவற்றை தடுக்கும் முறைகள், தூய்மை இந்தியா திட்டம் மற்றும் பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் சம்பந்தமான விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் சிறப்பு நிகழ்வாக, போகிப் பண்டிகையை முன்னிட்டு, கோடம்பாக்கம் மண்டலம், தியாகராய நகரில் உள்ள ஆர்.கே.எம் சாரதா வித்யாலயா பள்ளியில் 1,500 மாணவியர்கள் மற்றும் 52 ஆசிரியர்கள் பங்குபெற்ற ''புகையில்லா போகி'' குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று (09.01.2019) நடைபெற்றது.

இந்நிகழ்வில் போகிப் பண்டிகை அன்று டயர், டியூப், ரப்பர், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் இதரப் பொருட்களை எரிப்பதால் சுற்றுச்சூழலுக்கும் உடல்நலத்திற்கும் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மாணவிகளிடையே விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும், பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள், தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட ஒருமுறை மட்டுமே உபயோகித்து தூக்கி எறியக்கூடிய 14 வகை பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக பயன்படுத்த வேண்டிய பொருட்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அனைவரும் புகையில்லா போகி மற்றும் பிளாஸ்டிக் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்னர் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், எக்ஸ்னோரா அமைப்பின் தலைவர் ஆர்.கோவிந்தராஜ், தலைமை ஆசிரியை திருமதி N. சாந்தி ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**